National University Hospital



# நோயாளியின் உரிமைகளும் பொறுப்புகளும்

நோயாளிகளை முதன்மையாகக் கருதி, உயர்தர சுகாதாரப் பராமரிப்பு வழங்குவதே National University Hospital (NUH)–ன் கொள்கை, அடிப்படை பண்புகள், கடப்பாடு ஆகியவற்றின் ஆதாரமாகும். பல்கலைக்கழக மருத்துவமனையான NUH, பயிற்சி பெறும் மருத்துவப் பணியாளர்களை உள்ளடக்கும் குழு சார்ந்த அணுகுமுறையை நடைமுறைப்படுத்துகிறது.

## நோயாளியின் உரிமைகளும் பொறுப்புகளும்

எங்கள் சேவைகளைப் பயன்படுத்தும்போது உங்களுக்குள்ள உரிமைகளையும் பொறுப்புகளையும் இங்கு விவரிக்கிறோம். உயர்தரப் பராமரிப்பு வழங்கி, எங்கள் நோயாளிகளின் வாழ்வில் கூடுமானவரை மிகச்சிறந்த விளைவை ஏற்படுத்தும் எங்கள் இலக்குகள் நிறைவேற்றப்படுவது, NUH நோயாளி என்ற முறையில் உங்களது உரிமையாகும். உங்கள் உரிமைகளையும் பொறுப்புகளையும் அறிந்து, புரிந்து கொள்வதால், சுகாதாரப் பராமரிப்பு வழங்குவோருடன் உங்களுக்குள்ள உறவுமுறை இருவருக்கும் பலன்தரும் ஒன்றாக அமையும்.

உங்களது NUH வருகை அல்லது இங்கு தங்கியிருக்கும் அனுபவம் இனிதாகவும் சௌகரியமாகவும் அமைய எங்கள் பணியாளர்கள் அனைவரும் முயற்சி செய்வார்கள். உங்களுக்கு ஏதேனும் அக்கறைகள் இருந்தால் அல்லது உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து தயங்காமல் எங்கள் பணியாளர்களை அணுகவும்.

### A. எங்கள் இலக்குகள்

#### ✚ நோயாளிகளுக்கு உயர்தர மருத்துவக் கவனிப்பு வழங்கப்படவேண்டும்

- உங்கள் நலனைப் பாதுகாத்து, மருத்துவப் பிரச்சனைக்குச் சிகிச்சை அளிப்பதை அடிப்படை இலக்காகக் கொண்ட கடப்பாடுமிக்க மருத்துவப் பணியாளர்களின் துணையுடன் உங்களுக்கு உயர்தர மருத்துவப் பராமரிப்பு வழங்க நாங்கள் முயற்சி செய்வோம்.

- உங்கள் சிகிச்சை தொடர்பான அனைத்து மருத்துவத் தீர்மானங்களும் பரிந்துரைகளும், உங்கள் உடல்நிலை பற்றிய அனைத்து விவரங்களையும் கவனமாகப் பரிசீலித்த பிறகே எடுக்கப்படும்.

#### ✚ அனைத்து நோயாளிகளும் மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்தப்படுவர்

- உங்கள் வயது, பாலினம், இனம், குடியுரிமை, சமூக அந்தஸ்து, உடல் அல்லது மனநலன் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், அக்கறையான, மரியாதையான, பொருத்தமான, சிக்கனமான மருத்துவப் பராமரிப்பு வழங்கப்படும்.

- உங்களது உணர்ச்சிபூர்வ, சமூக, ஆன்மீக, கலாசாரத் தேவைகளை மருத்துவமனை மதித்து நடக்கும். உங்களது அன்மீக நம்பிக்கைகளையும் கலாசாரப் பழக்கங்களையும் எங்களிடம் தெரிவிக்கலாம். உங்கள் பராமரிப்பிலும் சிகிச்சையிலும் அவற்றை மதித்து நடக்க முயற்சி செய்வோம். இந்தக் கருத்துச் சுதந்திரத்தால் மற்றவர்களுக்குத் தொந்தரவோ தீங்கோ ஏற்படாத வரையில் இது அனுமதிக்கப்படும்.

- நீங்கள் பெறவிருக்கும் மருத்துவ சிகிச்சை பற்றி உங்களிடம் மற்றும்/அல்லது குடும்பத்தாரிடம் தெரிவிக்கப்படும். சட்டத்திற்கு உட்பட்டு, மருத்துவப் பராமரிப்பை அல்லது பறிந்துரைக்கப்படும் சிகிச்சையை நீங்கள் ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம். அவ்வாறு செய்யும்போது, உங்கள் முடிவால் நேரக்கூடிய மருத்துவ விளைவுகளுக்கு நீங்களே பொறுப்பேற்கவேண்டும்.

  மருத்துவ முன் உத்தரவு* செய்யும் அல்லது உங்களுக்காகச் சுகாதாரப் பராமரிப்புத் தீர்மானங்கள் எடுக்க ஒருவரை நியமிக்கும் உரிமை இதில் அடங்கும். உங்களது மருத்துவ முன் உத்தரவின், பிரதியை நீங்கள் மருத்துவமனையிடம் தந்தால், சட்டத்திற்கு உட்பட்டும் மருத்துவமனையின் கொள்கைக்கு ஏற்பவும் மருத்துவமனை உங்கள் விருப்பத்தை மதித்து நடக்கும்.

  *மருத்துவ முன் உத்தரவு (AMD) என்பது சட்டபூர்வ பத்திரமாகும். உங்கள் ஆயுளை நீட்டிக்க உயிர்காப்பு சிகிச்சை எதுவும் உங்களுக்கு வேண்டாமென (தீராத நோயுற்றால் அல்லது சுயநினைவிழந்தால்)உங்களுக்குச் சிகிச்சை செய்யும் மருத்துவரிடம் தெரிவிப்பதற்காக முன்கூட்டியே நீங்கள் கையெழுத்திடும் பத்திரம் இது. AMD குறித்த மேல் விவரங்களுக்கு, தயவுசெய்து MOH வலைத்தளம் பார்க்கவும்.

- நோயாளி பின்வரும் நிலையில் இருப்பதாக மருத்துவர் தீர்மானித்தால்
  - இயலாத நிலை (எந்தவொரு காரணத்தினாலும் உத்தேச சிகிச்சையைப் புரிந்துகொள்ள இயலாமை)
  - மருத்துவ ரீதியில் உத்தேச சிகிச்சையைப் புரிந்துகொள்ள இயலாமை மற்றும/அல்லத்
  - சிகிச்சை குறித்த தனது விருப்பத்தைத் தெரிவிக்க இயலாமை,

  அந்நிலையில், சட்டபூர்வ பாதுகாப்பாளர் அல்லது சட்டப்படி அனுமதிபெற்றவர் நோயாளியின் சார்பில் அவரது உரிமைகளை நிறைவேற்றலாம் (சட்ட வரையறைக்கு உட்பட்டு).

- ஆய்வுக்குத் திசு நன்கொடை அளித்தல் உட்பட, மனிதர்கள் சம்பந்தப்பட்ட அனைத்து ஆய்வுகளுக்கும் விவரமாக விளக்கிக்கூறி இணக்கம் பெறப்படும். உங்கள் நோயுடன் தொடர்புள்ள ஆய்வில் பங்கேற்க நீங்கள் மறுக்கலாம் அல்லது எந்நேரத்திலும் விலகலாம். உங்கள் மறுப்பால் நீங்கள் பெறும் பராமரிப்பு பாதிப்படையாது.

- ஆபத்திலிருந்து நியாயமான பாதுகாப்பளிக்கும் மனிதாபிமான சூழலில் மதிப்புடன் நடத்தப்படுவது உங்கள் உரிமையாகும். உங்கள் சுய பாதுகாப்பில் இவை உள்ளடங்கும்:
  - பாதுகாப்பான சூழலில் பராமரிக்கப்படவேண்டும்.
  - உடலளவிலான கட்டுப்பாடு அல்லது தனிமைப்படுத்தும் நிலை தவிர்க்கப்படும். உங்களுக்கு அல்லது மற்றவர்களுக்கு குறிப்பிடத்தக்க ஆபத்து உண்டாகக்கூடிய மருத்துவ நிலைகள் மட்டுமே இதற்கு விதிவிலக்கு.
  - முறையான பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். குறிப்பாக உடற்குறையுள்ளோர், முதியோர் அல்லது பலவீனமான பிள்ளைகள் ஆகியோருக்கு.

- உங்கள் உடல் நிலை குறித்து மறு ஆலோசனை பெற உங்களுக்கு உரிமை உண்டு. உங்கள் உடலாரோக்கியக்குழு உங்களின் விருப்பத்தை புரிந்து தேவையான உதவியை வழங்குவர்.

- மருத்துவர் உங்கள் உடல் சோதனையை மேற்கொள்ளும்போது, உங்கள் கண்காணிப்பிற்காக மற்றொரு மருத்துவ உதவியாளரை அனுமதி கேட்க உரிமைகள் உள்ளன.

## ✚ ஒவ்வொரு நோயாளியின் சுகாதாரப் பராமரிப்புக் குழுவினரின் பெயர் விவரங்களையும் பொறுப்புகளையும் தெரியப்படுத்தவேண்டும்

- உங்கள் பராமரிப்புக்கும் சிகிச்சைக்கும் பொறுப்பேற்கும் மருத்துவரின் பெயர் விவரத்தைத் தெரிந்துகொள்வது உங்கள் உரிமை.

- உங்கள் பராமரிப்புக்கும் சிகிச்சைக்கும் பொறுப்பேற்கும் சுகாதாரப் பராமரிப்புக் குழுவின் மற்ற உறுப்பினர்களின் விவரத்தையும் பொறுப்புகளையும் தெரிந்துகொள்வது உங்கள் உரிமை.

## ✚ நோயாளிகளின் மருத்துவக் குறிப்புகளின் அந்தரங்கம் காக்கப்படும்

- உங்களுக்கு நியாயமான அந்தரங்கம் அளிக்கும் வகையில் நீங்கள் பேட்டி காணப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படும்.

- உங்கள் பராமரிப்பில் சம்பந்தப்பட்டுள்ள அல்லது உங்கள் பராமரிப்பின் தரத்தைக் கண்காணிக்கும் தனிப்பட்டவர்கள் அல்லது சட்டத்தின் அல்லது மருத்துவமனையின் அனுமதியுடன் மருத்துவ ஆய்விலும் கல்வியிலும் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் ஆகியோர் மட்டுமே உங்கள் மருத்துவக் குறிப்புகளைப் படிக்க அனுமதிப்பது உங்கள் உரிமை.

- மருத்துவமனையின் கொள்கைக்கேற்ப உங்கள் மருத்துவக் குறிப்பின் பிரதியை நீங்கள் பெறலாம்.

## ✚ நோயாளிகளுக்கு விளக்கமும், விவரமும் ஆலோசனையும் வழங்கப்படும்

- உங்களது மருத்துவப் பிரச்சனை, திட்டமிடப்படும் சிகிச்சை, எதிர்பார்க்கப்படும் விளைவுகள்ஆகியவை உங்களுக்குப் புரியும் மொழியில் விளக்கிக் கூறப்படும்.

- வீடு திரும்பியபிறகு தேவைப்படும் பராமரிப்பு பற்றி உங்களிடம் கூறப்படும்.

## ✚ நோயாளிகளின் கேள்விகளுக்குப் பதிலளிக்கப்படும்

- நீங்கள் தீர்மானமெடுக்க விவரம் தேவைப்பட்டால், எந்தவிதக்கேள்விகளையும் தயங்காமல் கேட்கவும். உங்கள் கேள்விகள் அனைத்திற்கும் பதிலளிக்க மருத்துவமனை முயற்சி செய்யும்.

- உங்கள் மருத்துவக் கட்டணங்கள் பற்றிய கேள்விகள் இருந்தால், சுருக்கமான கட்டணப் பட்டியலையும் கட்டணங்களின் விவரங்களையும் கேட்டுப் பெறலாம்.

## ✚ நோயாளிகள் பாராட்டவும் கருத்துரைக்கவும் வழிகள் வழங்கப்படும்

மருத்துவமனை உங்கள் கருத்துகளை வரவேற்கிறது. உங்கள் அனுபவம் இனிதே அமைந்திருந்தால், உங்கள் பாராட்டுகளையும் வரவேற்கிறோம். நீங்கள் எங்களது

தரச்சேவை நிர்வாகியுடன் (QSM) 1800-778-9243 என்ற எண்ணில் அலுவலக நேரத்தில் (காலை 8:30 - மாலை 5:30 மணி, திங்கள் முதல் வெள்ளி) தொடர்பு கொள்ளலாம், அல்லது qsm@nuhs.edu.sg முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

### NUH நோயாளி என்ற முறையில்,

- உங்கள் மருத்துவரின் ஆலோசனையை மீறி மருத்துவமனையிலிருந்து வெளியேறும் உரிமை உங்களுக்கு உண்டு. அனால் சட்டம் வரையறுத்தால் அல்லது உங்களுக்குக் குறிப்பிட்ட நோய்கள் இருந்தால் அல்லது நீங்கள் சட்டப்படி காவலில் இருந்தால் இந்த உரிமையை நிலைநாட்ட முடியாது. நீங்கள் வெளியேறத் தீர்மானித்தால், அதன்பிறகு உங்கள் உடல்நலனில் ஏற்படக்கூடிய எந்தவொரு மருத்துவ விளைவுக்கும் மருத்துவமனையும் மருத்துவர்களும் பெறுப்பாகமாட்டார்கள். மருத்துவமனையின் பொறுப்புகளைக் களையும் "At Own Risk" படிவத்தில் நீங்கள் கையெழுத்திடவேண்டும்.

- வருகையாளர் நேரத்தில் குடும்பத்தினர், நண்பர்கள், மற்றும் இதர வருகையாளர்கள் அகியோரைச் சந்தித்துப் பேசும் உரிமை உங்களுக்கு உண்டு. உங்கள் மருத்துவர் அல்லது மருத்துவமனையின் கொள்கை வேறுவிதமாக உத்தரவிட்டிருந்தால் இந்த உரிமையை நிலைநாட்ட முடியாது.
வருகையாளர்களைப் பார்க்க மறுக்கும் உரிமையும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் உண்டு.

## B. நோயாளி மற்றும் குடும்பத்தின் பொறுப்புகள்

NUH–ல், நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் எங்களது சுகாதாரப் பராமரிப்புக் குழுவில் முக்கிய அங்கம் வகித்து, உங்கள் பராமரிப்பையும் சிகிச்சையையும் பாதுகாப்பாக்குவதில் மிக முக்கிய பொறுப்பேற்கிறீர்கள்.

தரமான சுகாதாரப் பராமரிப்பு வழங்கிட, நோயாளிகளுக்கும் சுகாதாரப் பராமரிப்பு வழங்குவோருக்கும், இடையில் அணுக்கமான ஒத்துழைப்பு, இருப்பது அவசியம். மருத்துவக் குழுவினர் மிகச்சிறந்த பராமரிப்பும் சிகிச்சையும் வழங்கிட உதவி, நோயாளிகள் தங்கள் பராமரிப்புக்குப் பொறுப்பேற்கலாம்.



## ✚ விவரம் வழங்குதல்

நீங்கள் செய்ய வேண்டியவை:

- உங்களது தற்போதைய உடல்நிலை, கடந்தகால நோய்கள், மருத்துவமனையில் தங்கிய சம்பவங்கள், மருந்துகள், உங்கள் உடல்நலன் குறித்து மருத்துவமனை அறிய வேண்டிய மற்ற அனைத்து விவரங்கள் ஆகியவை உட்பட உங்கள் உடல்நலன் பற்றி முழுமையாகவும், துல்லியமாகவும் நீங்கள் விவரம் தெரிவிக்கவேண்டும்.

- உங்களது முழுப் பெயர், முகவரி, தொடர்பு எண்கள், தேவையாயின் பிறந்த தேதி உட்பட உங்களது சொந்த விவரங்கள் அனைத்தையும் முழுமையாகவும் துல்லியமாகவும் தெரிவிக்கவேண்டும்.

- உங்களிடம் மருத்துவ முன் உத்தரவு இருந்து, மருத்துவமனையில் சேர்க்கப்படும்போது அது பயன்படுத்தப்படவேண்டும் என்று நீங்கள் நினைத்தால், அதன் பிரதியை மருத்துவமனையிடம் தரவேண்டும்.

- உங்கள் உடல்நலப் பிரச்சனை அல்லது சிகிச்சை திட்டம் புரியாவிட்டால் கேள்விகள் கேட்கவும். என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பது உங்களுக்குத் தெளிவாகப் புரிகிறதா என்பதை மருத்துவமனை பணியாளர்களிடம் தெரியப்படுத்துவது உங்களின், உங்கள் குடும்ப உறுப்பினர்களின் பொறுப்பாகும்.

- உங்கள் உடல்நலனில் மற்றும்/அல்லது பிரச்சனையில் ஏற்படும் மாற்றங்களைத் தெரியப்படுத்தவேண்டும்.

## ✚ மருத்துவர் பரிந்துரைக்கும் சிகிச்சை திட்டத்தைப் பின்பற்றவேண்டும்

நீங்கள் செய்ய வேண்டியவை:

- உங்கள் சிகிச்சை திட்டம் குறித்து தீர்மானம் எடுத்தல் உட்பட உங்கள் சிகிச்சையில் தீவிரமாக ஈடுபடவும். உங்கள் மருந்துகளை உட்கொள்ளுதல், தொடர் வருகை தேதிகளில் வருகை தருதல் ஆகியவையும் இதில் அடங்கும்.

- பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சை திட்டத்தைப் பின்பற்றுவதில் நீங்கள் எதிர்நோக்கக்கூடிய தடங்கல்களை மருத்துவமனையிடம் தெரிவிக்கவும்.

- மருத்துவ சிகிச்சையை மறுத்தால் அல்லது மருத்துவ அலோசனையை மீறி மருத்துவமனையிலிருந்து வெளியேறினால் ஏற்படும் விளைவுகளுக்குப் பொறுப்பேற்கவும்.

## ✚ மற்றவர்களிடம் மரியாதையும் அக்கறையும் காட்டவும்

நீங்களும் உங்கள் குடும்ப உறுப்பினர்களும் செய்யவேண்டியவை:

- நோயாளிகள் மற்றும் வருகையாளர்கள் தொடர்பான அனைத்து மருத்துவமனை விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு நடக்கவும்.

- மருத்துவமனை பணியாளர்கள், மற்ற நோயாளிகள், வருகையாளர்கள் அனைவரையும் பணிவன்புடனும் மரியாதையுடனும் நடத்தவும்.

- உங்களுக்குக் குறித்துத் தரப்பட்ட நேரத்தில் வரவும். அவ்வாறு செய்ய இயலாவிட்டால், முன்கூட்டியே மருத்துவமனையிடம் தெரியப்படுத்தவும்

- மற்ற நோயாளிகளின் அந்தரங்கத்தை மதித்து நடக்கவும்.

- மருத்துவமனையில் இருக்கும்போது உங்களது விலையுயர்ந்த பொருட்களும் சொந்த உடமைகளும் பத்திரமாக இருப்பதற்குப் பொறுப்பேற்கவும்.

- மருத்துவமனையின் சொத்துகளையும் வசதிகளையும் தகுந்த முறையில் பராமரித்து, பொறுப்புடன் நடத்தவும்.

## ✚ சமய அலோசனை

- மருத்துவமனையில் தங்கியிருக்கும்போது சமய அலோசகர் வருகையளிக்க மற்றும்/அல்லது உங்களுக்காகப் பிரார்த்திக்க நீங்கள் தாராளமாக ஏற்பாடு செய்யலாம்.

- சமய அலோசகர் வருகையளிப்பதாக இருந்தால், தயவுசெய்து தாதியிடம் தெரியப்படுத்தவும்.

- மற்ற நோயாளிகளை மதித்து, அவர்களுக்குத் தொந்தரவில்லாமல், தயவுசெய்து உங்கள் படுக்கைக்கு அருகில் அமைதியான முறையில் சமய வழிபாட்டை நடத்தவும்.

- சிங்கப்பூரில் சமய அலோசகர் அல்லது சமய நிலையத்தைக் கண்டுபிடிக்க உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், இதுபோன்ற சேவை வழங்குவோரின் தொடர்பு விவரப் பட்டியலை எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம். ஆன்மீக ஆலோசனைக்கு ஏற்பாடு செய்ய தாதி, நோயாளி சேவை நிலையங்கள் அல்லது மருத்துவச் சமூகச் சேவையாளர் ஆகியோரும் உதவ முடியும். சிங்கப்பூர் தொலைபேசி விவரப்புத்தகத்திலும் அன்மீக நிலையங்களின் பட்டியல் உள்ளது.

## ✚ மருத்துவமனை கட்டணங்கள்

நீங்கள் செய்ய வேண்டியவை:

- மருத்துவமனை உங்களுக்கு வழங்கிய பராமரிப்புக்கும் சிகிச்சைக்கும் உடனுக்குடன் கட்டணம் கட்டவும்.

- உங்களுக்குப் புரியாத நிதி விவகாரங்கள் ஏதேனும் இருந்தால், உடனுக்குடன் விளக்கம் கேட்டு தெளிவு பெறவும்.

## ✚ உறுப்புகள் தானமளிப்பு

உறுப்பு செயலிழந்துவிட்ட நோயாளிகளைக் காப்பாற்ற ஒரே வழி மாற்று உறுப்பு சிகிச்சை மட்டும்தான். மாற்று உறுப்பு சிகிச்சையில், தானமளிப்பவரின் ஆரோக்கியமான உறுப்பு (கல்லீரல் அல்லது சிறுநீரகம் போன்றவை), உறுப்பு செயலிழந்துவிட்ட நோயாளியின்



உடலில் வைக்கப்படும். மருத்துவ (சிகிச்சை, கல்வி மற்றும் ஆராய்ச்சி) சட்டத்தின் (MTERA) படி, 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள், எந்த நாட்டினராக இருந்தாலும், நீங்கள் உறுப்பு தானம் செய்வதாக உறுதிமொழி எடுத்து, உயிரைக் காப்பாற்ற உதவலாம். ஒருவரின் தானத்தால் பலர் பலனடைவார்கள்.

இறந்தவர்களின் உறுப்புகள் தவிர, உயிருள்ளவர்கள் உறுப்பு தானம் செய்யவும் HOTA சட்டம் வகை செய்கிறது (அதாவது, உயிருள்ளவரின் உறுப்புகளை எடுத்து நோயாளியின் உடலில் பொருத்துதல்).

உயிருள்ள ஒருவர் உறுப்பு தானம் செய்திட, மாற்று உறுப்பு நெறிக் குழுவிடம் முதலில் அனுமதி பெறவேண்டும். உறுப்பு தானம் செய்பவர் உறுப்பு பெறுபவரின் உறவினராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த விதி பொருந்தும்.

உறுப்பு தானம் பற்றி மேல்விவரம் அறிய, உங்கள் மருத்துவரை அல்லது தாதியை அணுகலாம், அல்லது NUH கல்லீரல் ஞ சிறுநீரக மாற்று சிகிச்சை அலுவலகத்தை (65) 6772 2930 அல்லது (65) 6772 4864 என்ற எண்ணில் அழைக்கலாம்.

National University Hospital
5 Lower Kent Ridge Road, Singapore 119074
OneNUHS Hotline: (65) 6908 2222
OneNUHS General Enquiries: contactus@nuhs.edu.sg
OneNUHS Appointments: appointment@nuhs.edu.sg
www.nuh.com.sg

Scan for
more information

OneNUHS APP
Healthcare Made Simple

Scan to download

**Take charge of your health and access health information and services across NUHS institutions.**

© 2023, National University Hospital (Singapore) Pte Ltd. All rights reserved. No part of this publication may be reproduced or shared without prior permission from National University Hospital (Singapore) Pte Ltd.

Information is correct at time of printing (Mar 2023) and subject to revision without prior notice.